முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை: அனைத்து கட்சி கூட்டம் கூட்ட ஓ.பி.எஸ். வலியுறுத்தல்

சென்னை, நவ.13–

முல்லைப்பெரியாறு அணை பிரச்சினை சம்பந்தமாக அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தி யுள்ளார்.இதுகுறித்து அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான ஓ. பன்னீர்செல்வம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்திக் கொள்ளவும், பேபி அணை மற்றும் சிற்றணை ஆகியவை பழுதுபார்க்கப்பட்டு, பலப்படுத்த பட்ட பின் அணையின் நீர்மட்டத்தை 152 அடி வரை உயர்த்திக் கொள்ளவும், பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்வதற்கு கேரள அரசு எந்தவித இடையூறும் அளிக்கக்கூடாது எனவும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பினில் கூறியுள்ளது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், பேபி அணையை பலப்படுத்தும் வகையில், அதற்குக் கீழுள்ள 23 மரங்களை வெட்டுவது தொடர்பான கருத்துரு, கம்பம் நீர் ஆதாரத் துறையின் செயற்பொறியாளரால் கேரள வனத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனைப் பரிசீலித்த பெரியாறு புலிகள் காப்பக கிழக்குக் கோட்ட துணை இயக்குநர், தமிழ்நாட்டிற்கு குத்தகைக்கு விடப்பட்ட முல்லைப் பெரியாறு பகுதியில் உள்ள 15 மரங்களை வெட்ட பரிந்துரை செய்து கேரள அரசின் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வனவிலங்கு காப்பாளருக்கு 30.10. 2021 நாளிட்ட கடிதத்தின் மூலம் அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதன் அடிப்படையில், கேரள அரசின் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வனவிலங்கு காப்பாளர் அங்குள்ள 15 மரங்களை வெட்டிக் கொள்ள அனுமதி அளித்து அதற்கான 5.11.2021 நாளிட்ட ஆணையை கம்பத்தில் உள்ள நீர் ஆதாரத் துறை செயற் பொறியாளருக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் எந்தெந்த மரங்கள் வெட்டப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கேரள அமைச்சர் மறுப்பு

இதனையடுத்து, முதலமைச்சரும் கேரள அரசிற்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளார். இந்தச் செய்தி அனைத்து பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் செய்தியாக வந்தது. இதற்கு மறுநாளே, கேரள மாநில வனத் துறை அமைச்சர், மரங்களை வெட்ட அனுமதி கொடுத்தது தனக்குத் தெரியாது என்றும், இது குறித்த முடிவு அதிகாரிகள் மட்டத்தில் எடுக்க முடியாது என்றும், இது கொள்கை சம்பந்தப்பட்ட முடிவு என்றும், இது குறித்து கேரள முதலமைச்சருக்கோ, நீர் பாசனத் துறை அமைச்சருக்கோ, வனத் துறை அமைச்சருக்கோ எதுவும் தெரியாது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அந்தச் செய்தியும் பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன, இதனைத் தொடர்ந்து மரங்களை வெட்டுவ தற்கான ஆணை ரத்து செய்யப்பட்டு விட்டதாகவும் பத்திரிகையில் செய்தி வெளி வந்துள்ளது.

கேரளமுதலமைச்சருக்குதெரியாமல் அதிகாரிகள் மட்டத்தில் இதுபோன்ற முடிவு எடுக்கப்பட்டு இருக்கும் என்பது நம்பும்படியாக இல்லை. மேலும், புதிய அணை கட்டப்பட வேண்டும் என்பதில் கேரளா உறுதியாக உள்ளதாகவும், இதுகுறித்து அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் முதலமைச்சர்களுக்கு இடையேயான கூட்டத்தில் பேச இருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன.

அதிகாரி சஸ்பெண்ட்

இந்தச் சூழ்நிலையில், மரங்களை வெட்ட அனுமதி அளித்ததற்காக. இந்திய வனப் பணி அதிகாரியான முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வனவிலங்கு காப்பாளரை தற்காலிக பணியிடை நீக்கம் செய்து கேரள அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்திய அதிகாரியை பணியிடை நீக்கம் செய்திருப்பது கண்டனத்துக்குரியது என்பதோடு மட்டுமல்லாமல் நீதிமன்ற அவமதிப்பாகும்.

மரங்களை வெட்ட அனுமதி அளித்த ஆணை வெளிவந்த மறு வினாடியே கேரள முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்த தமிழ்நாடு முதலமைச்சர், அதற்குப் பிறகு நடந்த நிகழ்வுகள் குறித்து மவுனமாக இருப்பது வியப்பாக இருக்கிறது. நீர்வளத் துறை அமைச்சரோ, 'இது அம்மாநில அரசு அலுவலர்களும் அமைச்சரும் சம்பந்தப்பட்ட விஷயம், அதில் நாங்கள் தலையிட விரும்பவில்லை' என்று மழுப்பலான பதிலைக் கூறி நழுவி விட்டார்.

மவுனம் சாதிப்பதா?

தி.மு.க. கூட்டணிக் கட்சிகளும் இதுகுறித்து பேச தயங்குகின்றன. தமிழ்நாட்டின் உயிர்நாடி பிரச்சனையான முல்லைப் பெரியாறு பிரச்சனையில் மவுனமாக இருப்பது தமிழக மக்களுக்கு, தமிழ்நாட்டிற்கு செய்கின்ற துரோகம் ஆகாதா? என்னதான் கூட்டணித் தர்மம் என்றாலும், தமிழ்நாட்டின் உரிமை பறிபோகின்ற விஷயத்தில் மவுனம் சாதிப்பது சரிதானா! என்பதை தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

கேரளாவிற்கு ஆதரவான மனநிலையில் ஆளும் கூட்டணியை சேர்ந்த அரசியல் கட்சிகள் இருப்பதாக பொதுமக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் நினைக்கும் சூழ்நிலை தமிழ்நாட்டில் உருவாகி இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கின்ற கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டின் உரிமை என்று வரும்போது, அதை எதிர்த்து குரல் கொடுக்க வேண்டிய கடமை தமிழ்நாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்று சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, இருக்கின்ற அனைவருக்கும் உண்டு.

அனைத்து கட்சி கூட்டம்

இந்த விஷயத்தில் மவுனம் சாதிப்பது என்பது தமிழ்நாட்டின் உரிமையை கேரளாவிற்கு அடகு வைத்ததற்குச் சமம். முல்லைப் பெரியாறு பிரச்சனையில் நாம் அனைவரும். ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்பதோடு, இது குறித்து, அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி, விவாதித்து, அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஒருமித்த முடிவினை எடுக்க வேண்டும். முல்லைப் பெரியாறு அணை குறித்த வழக்கு இன்று உச்ச நீதிமன்றத்தில் வருவதாக கூறப்படுகிறது. அப்போது, இது குறித்து வலுவான வாதங்களை தமிழ்நாட்டின் சார்பில் எடுத்துரைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழக மக்களிடம் உள்ளது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் இந்தப் பிரச்சனையில் உடனடியாகத் தலையிட்டு, பேபி அணையை வலுப்படுத்த கேரள அரசு இடையூறு அளிக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், ஆண்டுக் கணக்கில் இடையூறு அளித்து வரும் கேரள அரசை தட்டிக் கேட்க வேண்டுமென்றும், மரங்களை வெட்டுவதற்கான அனுமதி ஆணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை திரும்பப் பெற கோளா அரசை வலியுறுத்த வேண்டுமென்றும், இந்தப் பிரச்சனை குறித்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க ஏதுவாக அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்றும், தமிழ்நாட்டிற்கு எதிரான கேரள அரசின் நடவடிக்கையை உச்ச நீதிமன்றத்தில் எடுத்துரைக்க வழிவகை செய்ய வேண்டுமென்றும், புதிய அணை. கட்டுவது தொடர்பான எந்தப் பேச்சுவார்த்தைக்கும் இடம் தரக்கூடாது என்றும் அண்ணா தி.மு.க. சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஓ. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான ஓ. பன்னீர்செல்வம் இரண்டாவது நாளாக இன்று, சமீபத்தில் பெய்த பெருமழையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள, தென் சென்னை மாவட்டம், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட மந்தைவெளி பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்து, அப்பகுதி மக்களுக்கு உணவு மற்றும் நிவாரண உதவிகளை வழங்கி ஆறுதல் கூறினார். அப்போது, தென் சென்னை தெற்கு (கிழக்கு) மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் எம்.எல்.ஏ., எம்.கே.அசோக், மயிலாப்பூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர். நட்ராஜ், கழக ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர், முன்னாள் எம்.பி. டாக்டர் ஜெ. ஜெயவர்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் உடனிருந்தனர்.

உள்ளாட்சி தேர்தல்: சென்னை கோட்ட பொறுப்பாளராக கராத்தே ஆர். தியாகராஜன் நியமனம்

சென்னை, நவ.13

உள்ளாட்சி தேர்தல் நடைபெறுவதையொட்டி சென்னை நகர முன்னாள் மேயர் கராத்தே ஆர். தியாகராஜனை சென்னை கோட்ட பொறுப்பாளராக நியமனம் செய்து பா.ஜ.க தலைவர் அண்ணாமலை உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் விரைவில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ளது. தமிழக பா.ஜ.க கட்சியின்படி சென்னை கோட்டத்தில் 7 மாவட்டங்கள் வருகின்றன. காஞ்சிபுரம்–1, செங்கல்பட்டு–1, திருவள்ளூர்–2 ஆக மொத்தம் 11 மாவட்டத்திற்கான தேர்தல் பொறுப்பாளராக சென்னை நகர முன்னாள் மேயர் (பொறுப்பு) கராத்தே ஆர். தியாகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ளார்.

மேலும் அவருக்கு கீழே தேர்தல் பணியாற்ற பொறுப்பாளர்களையும் அந்த அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:–

மாநகராட்சிக்கு பா.ஜ.க துணை தலைவர் முன்னாள் எம்.பி., வி.பி. துரைசாமி, இளைஞர் அணித் தலைவர் வினோஜ் பி. செல்வம், நகராட்சிக்கு முன்னாள் எம்.எல்.ஏ., காயத்திரி தேவி, வி.ஜி.ரங்கசாமி, பேரூராட்சிக்கு ஜெ.லோகநாதன், கே.பி. ஜெயக்குமார், அரசு தொடர்புக்கு முன்னாள் எம். எல்.ஏ., கு.க.செல்வம், மீனவர் அணித் தலைவர் எஸ். சதீஷ்குமார், வழக்கறிஞர் பிரிவு தலைவர் செங்குட்டுவன்.

இவ்வாறு அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம்: 5 வது நாளாக 119 அடியாக நீடிப்பு

மேட்டூர், நவ. 13–

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 5 வது நாளாக 119 அடியாக நீடிக்கும் நிலையில், நீரின் அளவு இன்று காலை வினாடிக்கு 12,393 கன அடியாக குறைந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 5ஆவது நாளாக 119 அடியாக நீடிக்கிறது. அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 14,812 கன அடியிலிருந்து 12,396 கன அடியாக குறைந்துள்ளது. மேட்டூர் அணையிலிருந்து வினாடிக்கு 12,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது 100 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

கிழக்குமேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 150 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 91.88 டி.எம்.சி ஆக உள்ளது. காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை தணிந்ததன் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு சரிந்து வருகிறது.

மழையினால் பாதிக்கப்பட்ட சென்னை கொருக்குப்பேட்டை 42 வது தெற்கு வட்டத்திற்குட்பட்ட ரங்கநாதபுரம், தியாகப்பாச் செட்டி தெரு, கண்ணன் தெரு, தங்கவேல் பிள்ளை தோட்டம், உள்ளிட்ட பகுதிகளில் வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட அண்ணா தி.மு.க. செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ் வீடு, வீடாக சென்று உணவுகளை வழங்கினார். இதில் பகுதி கழக நிர்வாகிகள், பிற அமைப்பு நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு கோரும் தீர்ப்பாயம் மற்றும் சார்பு நீதிபதி நீதிமன்றம்
I.A.No.1/2021
MCOP No.87/2016

1) விஜயா
2) செல்வராஜ்
...மனுதாரர்கள்
எதிர்
1) விஜயகுமார்
2) M/s.இந்தியா ஷீஸ் சென்னை
3) யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்.லிட்., திருவண்ணாமலை
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேலே கண்ட மனுதாரர்கள் தனது மகன் நந்தகுமார் என்பவர் கடந்த 14.07.2015ந் தேதி நடந்த சாலை விபத்தில் பலத்த காயங்கள் ஏற்பட்டு இறந்து விட்டார். மேற்படியாரின் இறப்புக்கு இழப்பீடு கோரி எதிர்மனுதாரர்கள் மீது மேற்படி நெம்பர் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்ற அறிவிப்பு அனுப்பியதில் 2, 3 எதிர்மனுதாரர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரருக்கு பலமுறை நீதிமன்ற அறிவிப்பு அனுப்பியும் பெறாததால் மேற்படி கோர்ட்டில் மனுதாக்கல் செய்து தினசரி செய்தித்தாள் சென்னையில் விளம்பரம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி 1ம் எதிர்மனுதாரர் வரும் 25.11.2021 அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ அன்று காலை 10 மணிக்கு ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்க வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப் படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

R.P.Marimuthu
Advocate

IN THE COURT OF X ASSISTANT, CITY CIVIL COURT AT CHENNAI
E.P.No.66/2021
IN
ARB No. 221/2017

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
...மனுதாரர்/ தீர்ப்பானை பெற்றவர்
எதிர்
திரு. பொன்னுசாமி மற்றும் ஒருவர்
...எதிர் மனுதாரர்கள்/ தீர்ப்பு கடனாளிகள்
பெறுநர்
திரு. பொன்னுசாமி, நெ.21/47
அன்னை இந்திரா நகர், 2வது அவின்யூ, வில்லிவாக்கம்,
சென்னை–600 049
தீர்ப்பு கடனாளி 1

மேற்கண்ட நிறைவேற்றுகை மனு தங்களுக்கு எதிராக மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனு கடந்த 12.11.2021ந் தேதி மேற்படி நீதிமன்றத்தில் தங்களின் வருகைக்காக போடப்பட்டு, தாங்கள் ஆஜராகததால் மேற்படி வழக்கு 13.12.2021ந் தேதி தங்களின் வருகைக்காக போடப் பட்டுள்ளது. எனவே தாங்கள் 13.12.2021ந் தேதி காலை 10.30 மணிக்கு தாங்களோ தங்களின் வழக்கறிஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி, தங்களுடைய தரப்பு வாதத்தை தெரிவிக்கலாம், தவறும்பட்சத்தில் மேற்படி மனு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப் படும் என்பதை இந்த அறிவிப்பு மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்

L. ராஜேந்திரன்
A. சையது முஸ்தபா
மனுதாரரின் வழக்கறிஞர்கள்

சிதம்பரம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம்

மகாலட்சுமி, க/பெ. வெங்கடேசன்
தங்கலிகுப்பம் (வ),
ஆயிகுப்பம் (போஸ்ட்)
குறிஞ்சிப்பாடி தாலுக்கா
மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், சிதம்பரம்
எதிர்மனுதாரர்
அறிவிப்பு

மனுதாரர் மகாலட்சுமி என்கிற நான் எனது மாமியார் மேகவர்ணம் க/பெ. கலியன் என்பவர் வெள்ளியக்குடி, சிதம்பரம் தாலுக்கா என்ற முகவரியில் கடந்த 20.01.1986 அன்று உடல் நலம் சரியில்லாத காரணத்தால் இறந்து விட்டார். மேற்படி இறப்பு சான்று தேவைப்படுவதால் மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மேற்படி நீதிமன்றத்தில் 15 நாட்களுக்குள் நேரிலோ அல்லது எழுத்து மூலமோ தெரிவிக்க வேண்டியது. தவறினால் ஆட்சேபனை இல்லையென மனுஒருதலைபட்ச மாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

மகாலட்சுமி
மனுதாரர்

IN THE COURT OF II JUDGE SMALL CAUSES AT CHENNAI
M.C.O.P.No. 5635/2017

Mani ...Petitioner
Vs
Sujatha Sreeram and another ...Respondents

To
Sujatha Sreeram
W/o.Venkatamurali Krishna,
D.No.14–7–39B
Ponnur, Guntur District,
Ponnur–522 124

Take notice the above said matter posted on 17.12.2021 for you appearance before the Hon'ble II Judge Small Causes. Kindly make arrangements to appear on that on that day either by your or by your counsel at about 10.30 a.m. otherwise the matter will be decided in your absence.

K.R.Lazar
N.Venkatesan
Counsel for Petitioner

மாண்புமிகு தொழிலாளர் துணை ஆணையாளர் நீதிமன்றம், மதுரை
I.A.NO: 26 / 2021 in
E.C.NO: --- / 2021

G.லலிதாதேவி மற்றும் 4 நபர்கள்
W/o.லேட்.D.கணபதிராஜா,
கதவு எண்.2/72, சித்தாக்கூர்,
புதுத்தாமரைப்பட்டி அஞ்சல்,
மதுரை மாவட்டம்
--மனுதாரர்கள்/மனுதாரர்கள்.
---எதிரிடை---
தி ஹேப்ரன் இன்பிராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட்,
(The Hebron Infrastructure Private Limited),
அதன் உரிமையாளர், எண்.10, தாமஸ்தெரு,திருவள்ளூர்-602024
---எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்.
அறிவிப்பு

மேற்படி மனுதாரர்கள்/மனுதாரர்கள் நஷ்டஈடு கோரி தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கில் மேற்படி எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர் ஆஜராவதற்கு 22.11.2021-ம் தேதி அன்று வாய்தாஏற்பட்டுள்ளது. ஏதேனும் ஆட்சேபனைஇருந்தால் மேற்படி தினம் மாலை 03.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில்நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளவும். தவறினால் ஒரு தலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

A.V.S.அழகுராஜா,M.A.,B.L.
வழக்கறிஞர், மதுரை.

நேஷ்னல் ஆக்ஸிஜன் லிமிடெட்

CIN: - L24111TN1974PLC006819

பதிவு அலுவலகம் : எண். S-1, 2வது தளம், அல்சா மால், எண்.4/149, மாண்டியத் ரோடு, எழும்பூர் - 600 008.
போன் : 044-28520096, பேக்ஸ் : 044-28520095 E-mail: contactnolgroup.com Website : www.nolgroup.com

30.09.2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிவிப்பு

(ரூபாய் லட்சங்களில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு	
		30.09.2021	30.06.2021	30.09.2020	30.09.2021	31.03.2021
		த.ஆகாதது	த.ஆகாதது	த.ஆகாதது	த.ஆகாதது	த.ஆனது
1.	செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் (நிகரம்)	1314.95	1451.14	905.90	2766.09	4016.35
2.	வட்டி தேய்மானம் மற்றும் வரிகளுக்கு முன் லாபம் (EBITDA)	330.63	552.44	74.90	883.07	667.13
3.	நடப்பு காலத்துக்கான நிகரலாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது)	191.97	403.29	(121.59)	595.26	(109.52)
4.	வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	191.97	403.29	(121.59)	595.26	(109.52)
5.	வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	191.97	403.29	(121.59)	595.26	(109.52)
6.	நடப்பு காலத்திற்கான மொத்தம் விரிவான வருவாய்	191.97	403.29	(121.59)	595.26	(106.93)
7.	சமபங்கு மூலதனம்	480.23	480.23	480.23	480.23	480.23
8.	முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஸ்சீட்படி இதர பங்கு					(40.92)
9.	பங்கு ஒன்றின் வருவாய் -அடிப்படை :	4.00	8.40	(2.53)	12.40	(2.28)
10.	பங்கு ஒன்றின் வருவாய் - திட்டம் குறைந்தது :	4.00	8.40	(2.53)	12.40	(2.28)

1. மேற்கூறிய கம்பெனியின் நிதிநிலை முடிவுகள் தணிக்கையாளர் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு 12-11-2021 அன்று நடைபெற்ற கம்பெனியின் இயக்குனர் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். மேற்சொன்ன காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுபடிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனங்களின் இணையதளம் www.bseindia.com கம்பெனியின் இணையதளமான www.nolgroup.com காணலாம்.

இயக்குனர்கள் குழுவின் சார்பாக
ராஜேஷ்குமார் சரஃப்,
நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 12-11-2021

ஆஷ்ரம் ஆன்லைன்.காம் லிமிடெட்

பதிவு அலுவலகம்: புதிய நெ.29, பழைய நெ. 12, 2வது தளம், மூக்காத்தாள் தெரு, புரசைவாக்கம், சென்னை – 600 007.
இமெயில்: info@ashramonline.in / இணையதளம் : www.ashramonline.in
CIN No: L74999TN1991PLC020764

30.09.2021ல் முடிந்த காலாண்டு/அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ.லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு	முடிந்த காலாண்டு	முடிந்த காலாண்டு	முடிந்த அரையாண்டு	முடிந்த அரையாண்டு	முடிந்த ஆண்டு
	30.09.2021	30.06.2021	30.09.2020	30.09.2021	30.09.2020	31.03.2021
	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்தது)
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	9.30	9.49	11.02	18.78	23.11	74.64
வரிக்கு பின் தொடர் செயல்பாடுகளில் இருந்து நிகர லாபம்/(நஷ்டம்)	3.90	0.24	4.72	4.14	9.24	-66.16
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)	3.90	0.24	4.72	4.14	9.24	-66.16
செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.10/–)	1195.09	1195.09	1195.09	1195.09	1195.09	1195.09
கடந்த கணக்காண்டு நிதிநிலை அறிக்கைபடி மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக ரிசர்வ்	-150.05	-218.55	-160.72	-150.05	-160.72	-228.12
பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளிலிருந்து– ஒவ்வொன்றும் ரூ.10/–)						
(ஏ) அடிப்படை	0.03	0.00	0.04	0.03	0.08	-0.55
(பி) டைலூட்டட்	0.03	0.00	0.04	0.03	0.08	-0.55

குறிப்புகள்:
1. SEBI (பட்டியலிடுதல் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் பாம்பே ஸ்டாக் எக்சேஞ்ச் லிமிடெட்டில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு/பனிரெண்டு மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு / பனிரெண்டு மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் பாம்பே ஸ்டாக் எக்சேஞ்ச் லிமிடெட்டின் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.ashramonline.inல் உள்ளது.

ஆஷ்ரம் ஆன்லைன்.காம் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
சங்கீதா டாட்டியா
முழு நேர இயக்குனர்
DIN. 06932448

இடம்: சென்னை – 600 007
தேதி: 12.11.2021

TULSYAN NEC LIMITED

Regd. Off. : 1st Floor, Apex Plaza, 3, Nungambakkam High Road, Chennai - 600 034. **Phone :** 044 - 6199 1060.
Fax : 044 - 6199 1066. **email :** investor@tulsyannec.in
Website : www.tulsyannec.in **CIN No. :** L28920TN1947PLC007437

Extract of Unaudited Standalone and Consolidated Financial Results for the Quarter and Six Months ended September 30, 2021 under Ind AS

(₹ in Lakhs)

Sl. No.	Particulars	Standalone			Consolidated		
		Quarter ended September 30, 2021 (Unaudited)	Year to date figures September 30, 2021 (Unaudited)	Previous quarter ended September 30, 2020 (Unaudited)	Quarter ended September 30, 2021 (Unaudited)	Year to date figures September 30, 2021 (Unaudited)	Previous quarter ended September 30, 2020 (Unaudited)
1.	Total Income from Operations	19,427.30	35,678.17	13,222.58	22,516.00	40,208.90	13,877.19
2.	Net Profit/(Loss) for the period (before tax and exceptional items)	(1,276.29)	(598.27)	(5,888.80)	(1,373.76)	(432.46)	(6,062.77)
3.	Net Profit/(Loss) for the period before tax (after exceptional items)	15,709.79	43,593.15	(5,888.80)	15,612.32	43,758.96	(6,062.77)
4.	Net Profit/(Loss) for the period after tax (after exceptional items)	15,709.79	43,593.15	(5,888.80)	15,612.32	43,758.96	(6,062.77)
5.	Other comprehensive Income (net of tax)	(20.44)	(40.88)	(5.27)	(20.44)	(40.88)	(5.27)
6.	Total comprehensive Income for the period [comprising Profit/(Loss) for the period (after tax) and Other comprehensive Income (after tax)]	15,689.35	43,552.27	(5,894.07)	15,591.88	43,718.08	(6,068.04)
7.	Equity Share Capital (face Value of Rs.10 per share)	1,471.38	1,471.38	1,471.38	1,471.38	1,471.38	1,471.38
8.	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year						
9.	Earnings Per Share (of Rs.10/- each) (for continuing and discontinued operations) (a) Basic (b) Diluted	106.77 106.77	296.27 296.27	(40.02) (40.02)	106.11 106.11	297.40 297.40	(41.20) (41.20)

NOTES :
1. The above results were reviewed by the Audit Committee and thereafter approved and taken on record by the Board Of Directors at their meeting held on November 12, 2021.
2. The statement has been prepared in accordance with the companies (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS) prescribed under section 133 of the companies Act, 2013 and other recognised accounting practices and policies to the extent applicable.
3. The above is an extract of the detailed format of the unaudited financial results for the quarter and six months ended September 30, 2021 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Unaudited Financial Results for the Quarter and six months ended September 30, 2021 are available on the website of the BSE Limited i.e. **www.bseindia.com**, on the Stock Exchange where the Company's shares are listed and on the website of the Company i.e., **www.tulsyannec.in**
4. The previous year figures have been regrouped/re-classified wherever necessary

for Tulsyan NEC Limited
Sd/-
Sanjay Tulsyan
Managing Director
DIN : 00632802

Place : Chennai
Date : 12th November, 2021